## சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபை - 2017

---

சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபையின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக்கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1999 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத் தொகுதி அதிகாரசபையின் 9(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபையின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காத பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 1**

நியமத்தின் 48 ஆம் பிரிவின் பிரகாரம் தேவைப்படும் அல்லது அனுமதியளிக்கப்படுமிடத்து அல்லாது சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் என்பன எதிரீடு செய்யப்படலாகாதெனினும், அதற்கு முரணாக ரூபா 3,567,111 காசேட்டு செலவு மீதி (மேலதிகப்பற்று) நடைமுறைப்பொறுப்பின் கீழ் காட்டப்படுவதற்குப் பதிலாக காசு மற்றும் காசுக்கு நிகரானவையாக உள்ளடக்கப்பட்டு நடைமுறைச் சொத்துக்களிலிருந்து குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03**

(i) நியமத்தின் 12 ஆம் பந்தியின் பிரகாரம் அதிகாரசபை மீளாய்வாண்டினது நிதிக்கூற்றுக்களில் காட்டியுள்ள ரூபா 27,377,431 நட்டக் கடன் நிதியேற்பாட்டிற்கு நிச்சயமானதொரு கணக்கீட்டுக் கொள்கையை இனங்கண்டிருக்கவில்லை.

(ii) நியமத்தின் 47 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனமானது முன்னைய ஆண்டுகளுக்குரிய குறிப்பிடத்தக்க தவறுகளின் பொருட்டு, தவறு ஏற்பட்ட காலப்பகுதிக்கென சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஒப்பீட்டுப் பெறுமதிகளை மீள வெளியிடுவதன் மூலம் கடந்த காலத்திற்கேற்றவாறு சீராக்கம் செய்ய வேண்டுமாயினும், அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளாது 2016 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 4,424,606 சீராக்கலை உரிமை மூலதன மாற்றக் கூற்றில் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.

(இ) **இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7**

நியமத்தின் 65 ஆம் பந்தியின் பிரகாரம், நடைமுறை அல்லாத சொத்துக்களது பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் ரூபா 472.3 மில்லியன் கிரயமுடைய நிலையான சொத்துக்கள் முற்றாகத் தேய்மானத்திற்குள்ளாகியிருந்தபோதும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறிருந்தன. அதற்கமைவான மதிப்பிடப்பட்ட வழுவானது 03 ஆம் இலக்க இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் மீளாய்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) **இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 9**

2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நெடுங்காலமாக மெதுவாக நகர்ந்தவாறிருக்கும் ரூபா 1,296,163 பெறுமதியுடைய கையிருப்பு கிரயத்தில் காட்டப்பட்டுள்ளபோதும், அக்கையிருப்பானது நியமத்தின் 15 ஆம் பந்தியின் பிரகாரம் கிரயம் அல்லது நிகர தேறத்தகு பெறுமதி எனும் இரண்டில் எது குறைவானதோ அப்பெறுமதியில் நிதிக்கூற்றில் காட்டப்படவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்புகளினதும் ஏழு நாள் வைப்புகளதும் வட்டி வருமானம் ரூபா 1,450,747 ஆகியபோதும், அது நிதிச் செயலாற்றல் கூற்றில் ரூபா 7,907,177 ஆகக் காட்டப்பட்டமையால் நிலையான வைப்பு வருமானம் ரூபா 6,456,430 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம், நிலையான மற்றும் ஏழுநாள் வைப்புகளது மீதி ரூபா 29,860,199 ஆகியபோதும், வங்கி மீதி உறுதிப்படுத்தலின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 29,850,879 ஆகியமையால் மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அம்மீதி ரூபா 9,320 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காய்வினது கணிப்பீட்டின் பிரகாரம் பெற வேண்டிய ஏழு நாள் வைப்பு வட்டி ரூபா 7,685,674 ஆகியபோதும், நிதி நிலைமைக் கூற்றில் அது ரூபா 13,025,821 ஆகக் காட்டப்பட்டமையால் பெற வேண்டிய வட்டி ரூபா 5,340,147 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மூலதன மானியத்தைக் காலக்கழிவு செய்வதற்கான கொள்கை ஒன்று நிதிக் கூற்றுக்களில் இனங்காணப்பட்டிருந்த போதும், 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறாக அதிகார சபையின் மூலதன மீதியில் உள்ளடங்கிய ரூபா 3,749,785,477 மூலதன மானியத்தைக் கிரமமான அடிப்படையில் வருமானத்தில் பதிவழிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(உ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டியதாகக் காட்டப்பட்ட பெறுமதி சேர் வரி ரூபா 44,609,847 ஆகும். இதில் ரூபா 33,252,709 உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் மீளளிப்புச் செய்யப்பட முடியாததாகக் குறிப்பிடப்பட்டிருந்தும், தொடர்ந்தும் அது பெற வேண்டியவனவாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஊ) 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க பொருளாதாரச் சேவைக் கட்டண அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள பொருளாதாரச் சேவை வரி 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைமை வாய்ந்ததாக இருப்பின் அதனைக் கொடுப்பனவு செய்ய வேண்டிய வருமான வரியில் கழித்துக்கொள்ள முடியாது எனக் குறிப்பிடப்பட்டிருந்தபோதும், 2013 முதலாக இருந்து வரும் ரூபா 679,535 பொருளாதார சேவைக் கட்டணம் பெற வேண்டியனவாக நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

(எ) விளையாட்டுக் கூட்டுத் தொகுதியின் முடிவடைந்த 17 செயற்திட்டங்களுக்குரிய ரூபா 426,031,447 கிரயமானது மூலதனமாக்கப்படாது முடிவடையாத வேலையாகக் காட்டப்பட்டமை காரணமாக கட்டிடக் கிரயம் அதேயளவு குறைவாகவும் தேய்மானம் ரூபா 13,127,167 குறைவாகவும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை வொலிபோல் சம்மேளனத்திடமிருந்து ரூபா 3,332,206 அறவிட வேண்டியுள்ளதாக அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தபோதும், அச்சம்மேளனத்தின் கணக்குகளின் பிரகாரம் அது ரூபா 987,449 ஆகியமையால் ரூபா 2,344,757 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களத்திடமிருந்து ரூபா 1,942,827 அறவிட வேண்டியுள்ளதாக அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தபோதும், விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களத்தின் கணக்குகளின் பிரகாரம் அவ்வாறான பொறுப்பு காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திடமிருந்து ரூபா 16,553,844 அறவிட வேண்டியுள்ளதாக வர்த்தகக் கடன்பட்டோரில் அது உள்ளடக்கப்பட்டிருந்தபோதும், இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் கணக்குகளின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய தொகை ரூபா 15,973,848 ஆகியமையால் ரூபா 579,996 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊழியர் கடன் மீதி 24,127,690 ஆகியபோதும், குறித்த பட்டோலையின் பிரகாரம் அம்மீதி ரூபா 24,054,734 ஆகியமையால் ரூபா 72,956 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(உ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் சேர்ந்து நின்ற செலவினம் மற்றும் திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்பு மீதி என்பன முறையே ரூபா 14,530,784 மற்றும் ரூபா 10,407,436 ஆகியபோதும், அவற்றிற்குரிய பட்டோலையின் பிரகாரம் மீதி முறையே ரூபா 11,902,019 மற்றும் ரூபா 12,056,201 ஆகியமையால் ரூபா 2,628,765 மற்றும் ரூபா 1,648,765 வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் கணக்கீட்டு விடயங்களுக்கெதிரே சுட்டிக் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்கீட்டு விடயம் | பெறுமதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| (அ) | வர்த்தகக் கடன்பட்டோர் | 37,249,399 | காலப்பகுப்பாய்வும் ரூபா 20,368,013 க்கான மீதிகளது உறுதிப்படுத்தலும் |
| (ஆ) | ஆர்.பிரேமதாச விளையாட்டரங்கு கையிருப்பு | 2.149,491 | பட்டோலை / நேரடி சரி பிழை பார்த்தல் அறிக்கைகள் |
| (இ) | நிலையான சொத்துக்கள் | 4,915,015,139 | நேரடி சரி பிழை பார்த்தல் அறிக்கைகள் / நிலையான சொத்துப் பதிவேடு |
| (ஈ) | 400 மீட்டர் ஓட்டப் பாதைக்குச் செலுத்த வேண்டிய தொகை | 13,713,615 | மீதிகளை உறுதிப்படுத்தல் |

## 2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொடுப்பனவு செய்ய வேண்டிய வர்த்தக மீதியில் உள்ளடங்கிய 04 ஆண்டுகளாகவுள்ள ரூபா 463,443 கூட்டுத் தொகையுடைய 10 கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதிகளைத் தீர்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) 2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளுக்கெனக் கொடுப்பனவு செய்ய வேண்டிய பெறுமதி சேர் வரி தொடர்பாக ரூபா 8,939,262 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தபோதும், அவ்வரியை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கவோ அல்லது தீர்வு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

(இ) பதினொறு ஆண்டுகளாக கொழும்பு மாநகர சபைக்குச் செலுத்த வேண்டியுள்ள ரூபா 1,124,068 தீர்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| | நிதிப்பிரமாணங்கள் 880 மற்றும் 891(1) என்பன | காசாளர்களாகப் பணியாற்றும் உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைப் பணம் பெறப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதிகாரசபை பிணைப் பதிவேட்டைப் பேணவுமில்லை. |
| (ஆ) | 1999 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சுகததாச தேசிய விளையாட்டரங்கு கூட்டுத்தொகுதி அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவு | முகாமைத்துவச் சபை மாதத்திற்கு ஒரு முறையேனும் கூட்டங்களை நடாத்த வேண்டுமாயினும், 2017 ஏப்ரல், யூன், செப்டெம்பர் மாதங்களில் முகாமைத்துவச் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | பணி முடிவடைந்தவுடனேயே பெறப்பட்ட முற்பணம் தீர்வு செய்யப்பட வேண்டுமாயினும், 2013 முதல் 2016 வரை கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 825,252 முற்பணத்தைத் தீர்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான அதிகாரசபையின் நிதிப் பெறுபேறு ரூபா 154,960,050 பற்றாக்குறை ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 117,402,554 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேற்றில் மேலும் 32 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 37,557,496 நலிவு தென்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அரசாங்க மானியம் 25 சதவீதமாக ரூபா 40,240,000 குறைவடைந்தமை மேற்படி நிதிப் பெறுபேற்றிலான நலிவு அதிகரித்தமைக்கான பிரதான காரணியாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதிப் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்கையில், 2013 முதல் 2017 வரை நிதிப் பெறுபேற்றில் பற்றாக்குறை ஏற்பட்டிருந்ததுடன், 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டின் பற்றாக்குறை குறைவடைந்திருந்தது. எனினும், மீண்டும் மீளாய்வாண்டின்போது ரூபா 37,557,496 அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிதிப் பெறுபேற்றில் ஊழியர்களது ஊதியம், நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான தேய்மானம் மற்றும் அரசாங்க வரி என்பவற்றை மீண்டும் சீராக்கல் செய்யும்போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 106,361,763 ஆகவிருந்த அதிகாரசபையின் பங்களிப்பு மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 125,701,859 வரை அதிகரித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின்போது சபையின் நடைமுறை விகிதம் 2.47 முதல் 1.55 வரையாகவும் துரித விகிதம் 2.36 முதல் 1.47 வரையாகவும் குறைவடைந்திருந்தன. அதற்கமைய, நிறுவனத்தின் குறுகிய காலப் பொறுப்புகளைத் தீர்வு செய்யும் ஆற்றல் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நலிவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவச் செயற்பாடுகள்

2008 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் அதிகாரசபை அரச வங்கி ஒன்றில் ஏழுநாள் வைப்பில் முதலீடு செய்திருந்த தொகை ரூபா 24,919,980 ஆகும். அத் தொகையை நெடுங்கால நிலையான வைப்பில் முதலீடு செய்திருப்பின் கூடிய வருமானத்தைப் பெற்றிருக்கலாம் எனக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அதற்கமைய, அதிகாரசபை சாதகமான நிதிசார் நிலைமையைப் பெறும் வாய்ப்பு தவறியிருந்தது.

### 4.2 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

சுகததாச விளையாட்டரங்கில் உள்ள ரூபா 7,617,787 கையிருப்பில் (Indoor and out door) 2006 முதல் 2016 வரை கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,080,319 பெறுமதியான கையிருப்பு பயன்படுத்தப்படாதும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டவாறும் இருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 5. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி

நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ‘‘2030 நிகழ்ச்சி நிரல்’’ தொடர்பாக அதிகாரசபை இணையதளத்தின் மூலம் அறிந்திருந்தபோதும், தமது பரப்பெல்லைக்குள் வரும் பணிகளுக்குரிய நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கம், இலக்கு மற்றும் அந்த இலக்கை அடையும் விதம் மற்றும் இலக்கை அளவிடுவதற்கான அளவு கோல் என்பவற்றை இனங்கண்டிருக்கவில்லை. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை இனங்கண்டவாறு இருப்பதாக அதிகாரசபை இது தொடர்பாக விளக்கமளித்திருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வவ்போது அதிகாரசபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்களில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) கடன்பட்டோர், கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு | (i) கடன்பட்டோரது அதி கூடிய எல்லைகளும் காலமும் சம்பந்தமாக எல்லைகள் நிர்ணயிக்கப்படாமை |
| | (ii) கடன்பட்டோரின் மீதி உறுதி செய்யப்படாமை. |
| | (iii) பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதிகளைத் தாமதமின்றித் தீர்த்து வைக்காமை. |
| (ஆ) கணக்கீடு | (i) நிலையான வைப்பு வட்டியைச் சரிவரக் கணித்துக் கணக்கிலிடாமை. |
| | (ii) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை |